1980 பிப்ரவரி 11]

மானா மதுரை கூட்டுறவு உலோகத் தொழிற்சாலை.

*வினா எண் 115. திரு வ. மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மானா மதுரையிலுள்ள கூட்டுறவு உலோகத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதா?

(ஆ) மூடப்பட்டதற்கு என்ன காரணம்?

(இ) மீண்டும் திறக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது :

(அ. ஆ. மற்றும் இ.) மானாமதுரையிலுள்ள உலோகத் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவுச் சங்கத்தில் 1978 செப்டம்பர் மாதத்திலிருந்து வேலை நடைபெறவில்லை. தமிழ்நாடு கூட்டுறவுச் சட்ட விதிகளின்படி இச் சங்கத்தின் எதிர் கால நிலையைப்பற்றி முடிவெடுக்க ஒரு விசாரணை நடத்தப் பட்டது. விசாரணை அதிகாரி தன்னுடைய அறிக்கையில் இச் சங்கத்தை மீண்டும் நல்ல முறையில் நடத்த சாத்தியக் கூறுகள் இல்லை என்றும் இச் சங்கத்தை கலைத்து விடலாமென்றும் பரிந்துரை செய்துள்ளார். ஆகவே இச்சங்கத்தைக் கலைப்பதற் குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ஓ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை போல இதர பஞ்சாயத்து யூனியன்களிலும் உலோகத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. எங்கும் சரியாக நடைபெறவில்லை என்பது உண்மைதான். இதற்குக் காரணம் இத் தொழிலில் உள்ள சிக்கல்கள், தகடுகள் சரியாகக் கிடைக்காமை, கூலி நிர்ணயம் போன்ற பல காரணங்களால் உற்பத்தி அதிகரிக் காமல் இருக்கின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அவைகள் கிடைப்பதற்கு அரசு முயற்சி செய்தால் உண்மையி லேயே இலாபகரமாக நடக்கக்கூடிய தொழில் இது என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கான நடவடிக்கை எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு ஆய்வு செய்யப்படுமானால் இலாபகரமாக நடக்கக்கூடியது என்று சொல் லியிருக்கிறார்கள். ஆனால் இப்போது உண்மை நிலை என்ன வென்று சொன்னால் செப்பு பித்தளை பாத்திரங்களை வாங்கு வதைவிட மக்கள் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களைத்தான் விரும்பி அதிகமாக வாங்குகிறார்கள் என்ற காரணத்தினால்தான், மானாமதுரையில் உள்ள உலோகத் தொழிற்சாலை மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானாமதுரை தொழிற்சாலை கிழக்கு இராமநாதபுரத்தில் பிற்பட்ட பகுதியில் இருக்கக்கூடிய ஒரு தொழிற்சாலை. அதை மூடவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது பிற்பட்ட பகுதியில் உள்ள தொழிற்சாலை ஆதலால், அரசு எப்படியாவது உதவி செய்து அதை மீண்டும் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து இந்தத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் நட்டத்திலேயே நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும், எப்படியாவது இலாபகரமாக நடத்த வேண்டும் என்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டது. அதற்குக் காரணம், நான் முன்னாலே சொன்னது போல மக்கள் செம்பு, பித்தளை பாத்திரங்களை விட ஸ்டெயின்லெஸ் ஸ்டீலையே விரும்பி வாங்குகிறார்கள் என்பது தான். அது மட்டும் அல்லாது இந்தத் தொழிற்சங்கத்தில் பணி புரிந்து கொண்டிருந்தவர்கள் தனியாக தொழில் நடத்திக்கொண்டிருப்பதாலும், அவர்கள் திரும்பவும் வந்து இந்தச் சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்து வேலை செய்யத் தயாராக இல்லாத காரணத்தினாலும், இச்சங்கத்தை மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொந்த முயற்சி செய்து, உலோகத் தொழிலாளர்களைக் கொண்டு உடனடியாகச் சங்கத்தை திறக்க முயற்சி செய்தாலும், அதை வேறு ஒரு புதிய சங்கமாகக்கூட அங்கீகரித்து செயல்படுத்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, பித்தளை, செம்பு போன்ற பாத்திரங்களில் சமையல் செய்து சாப்பிட்டால் உடல் நலம் கெடுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, மண் பாத்திரங்களை உற்பத்தி செய்ய மண்பாண்டத் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே மண்பாண்டத் தொழிற்சாலையை அரசு ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கெனவே இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இலட்சக்கணக்கான மண்பாண்டங்களை தமிழகம் முழுவதும் தயாரித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்பதை விட அவர்களே மண்பாண்டங்களைப் பயன்படுத்தத் தொடங்கினால் நலமாக இருக்கும்.

1980 பிப்ரவரி 11]

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்பொழுதும் மண்பாண்டத்தில்தான் சமையல் செய்து சாப்பிட்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, அது அவருடைய உடல் வலுவைப் பார்க்கும்போது தெரிகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது மட்டும் அல்ல, அவரே ஒரு மண்பாண்டத் தொழிற்சாலையை மதுராந்தகத்தில் ஆரம்பித்தால் நன்றாக இருக்கும். (சிரிப்பு).

பட்டு உற்பத்தி நிலையம், பணகுடி.

*வினா எண். 116 —திரு. யா.சை.மு. யூசுப் : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல்லை மாவட்டம், இராதாபுரம் தொகுதியிலுள்ள பணகுடியில் பட்டு உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு செயல் படாது உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) பருவகால மாறுதல் காரணமாக ஏற்பட்ட கடுமையான காற்றின் தாக்குதலால் மணலால் மூடப்பட்டு, பட்டு வளர்ப்புத் தொழில் நடத்த முடியாத நிலை ஏற்பட்டதால், ஊரகத் தொழில் திட்டத்தின் கீழ் பணகுடி கிராமத்தில் 1964ல் துவக்கப் பெற்ற செயல் விளக்கப் பட்டுப் பண்ணையை மூடும்படி 1973ல் அரசு ஆணை பிறப்பித்தது.

திரு. யா.சை.மு. யூசுப் : பணகுடியில் உருவாகிய அந்தப் பட்டு குற்றாலம் மற்றும் இதர பகுதிகளில் உருவாகிய பட்டை விடதரம் மிகுந்ததாகக் கருதப்பட்டபோதிலும் பருவமழை என்று கருதாமல் தொடர்ந்து அந்த இடம் தூசிபடிகிற இடமாக இருக்கிறது என்று தெரிந்தும் தவறான ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்துவிட்டதால், கட்டடங்கள் பழுதடைந்து, கிணறுகள் மூடப்பட்டு திட்டம் பாழ்பட்டு விட்டது என்ற காரணத்தால், அங்குள்ள சீதோஷ்ண நிலையைக் கருதியும் வேறு ஒரு இடத்தில் அந்தத் திட்டத்தை மாற்றியமைக்க இந்த அரசு முன்வருமா ?